விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 143 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 28 வியாழக்கிழமை (11.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/- + 500/=


க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான

கொழும்பு றோயல் கல்லூரியின் பரீட்சை வினாத்தாள்

உள்ளே

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் அஞ்சலி



(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்கால் முற்றத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மண்ணில் நேற்று மதியம் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்பட்டது.

இதையடுத்து முள்ளிவாய்க்கால் 15

## டொலரின் பெறுமதி வீழ்ச்சி


(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள் 15

# ஜனாதிபதி - கூட்டமைப்பு இன்று கலந்துரையாடல்



- நல்லிணக்கம் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.
- வடக்கு - கிழக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.
- அதிகாரப் பகிர்வு தொடர்பில் நாளை கலந்துரையாடல்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான வடக்குக் கிழக்கு தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு மிடையிலான சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள குறித்த சந்திப்பில் நல்லிணக்கம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்கீழ்காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம், காணிப் பிரச்சினை, பயங்கரவாதத்தடைச்சட்டம், 15

## ஜனாதிபதித் தேர்தல் மூடிய அறைக்குள் ரணில் - பசில் பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் மூடிய அறைக்குள் முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அதில் பல விடயங்கள் பற்றி பேசப் 15

## மின்சார ஆட்டோ முன்னோடி வேலைத்திட்டம் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

பெற்றோலில் இயங்கும் முச்சக்கரவண்டிகளை மின்சார முச்சக்கரவண்டிகளாக மாற்றுவதற்கான முன்னோடி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர்நாயகம்நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இன்று முதல் முச்சக்கரவண்டிகளுக் 15

## எக்ஸ்-பிரஸ் கப்பல் அனர்த்தம் 10 நிமிடங்களுக்கு சபை ஒத்திவைப்பு

(கொழும்பு)

எக்ஸ்-பிரஸ் பேர்ல் கப்பல் அனர்த்தம் தொடர்பான விவாதத்தின்போது ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையால் பாராளுமன்ற அமர்வு நேற்று 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நீதியமைச்சர் விஜேயதாச ராஜ 15

## இலங்கையில் 1/3 பகுதியினருக்கு உணவுப் பாதுகாப்பற்ற நிலை

### உலக உணவுத் திட்டம்

(கொழும்பு)

2022ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகையில் மூன்றில் ஒருபகுதியினர் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் என ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

6.3 மில்லியன் மக்கள் 2022 ஆம் ஆண்டில் உணவு, எரிபொருள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறையால் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தனர் எனக் கூறியுள்ளது.

1948இல் சுதந்திரம் பெற்ற பின்னர் 15


## டெங்கு தொற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

### ஜனாதிபதி ரணில் உத்தரவு

(கொழும்பு)

டெங்கு தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் அனைத்து மாகாண செயலாளர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் எக்கநாயக்க எழுத்துமூலம் 15



பணவீக்கம் வீழ்ச்சியடைவதால்

## விரைவில் வட்டி வீதம் வீழ்ச்சியடையும் சாத்தியம்

### இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

எதிர்பார்க்கப்பட்டதை விடவும் மிகவேகமாகப் பணவீக்கம் வீழ்ச்சியடைந்துவரும் நிலையில், அதற்கு சமாந்தரமாக வட்டிவீதங்களும் வீழ்ச்சியடையுமென இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எதிர்வு கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பொருளியல் கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடை, பல்பொருள் வாணிபக்கடைகள் (நாவாந்துறை), சந்தைகள், சிற்றுண்டிச்சாலை, ஒலிபரப்புச் சேவைகள், ஆரியகுளம் படகோட்டல் மற்றும் நீர் விளையாட்டுகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள், சந்தைகள், சிற்றுண்டிச்சாலை, விளம்பர ஒலிபரப்பு சேவைகள் **01.06.2023** ம் திகதி முதல் **31.05.2024** ம் திகதி வரையான காலப்பகுதிக்கும் , ஆரிய குளம் படகோட்டல் மற்றும் நீர்விளையாட்டுகள் 20.05.2023 - 19.05.2024 வரையான காலப்பகுதிக்கும் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா **1,150.00** (பெறுமதி சேர் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 11.05.2023 - 18.05.2023 **( மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)**
கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளல் - 11.05.2023 - 19.05.2023 மு.ப 11.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 19.05.2023 மு.ப 11.00 மணிக்கு

விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **19.05.2023 ம் திகதி மு.ப 11.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

### இறைச்சிக்கடை, பல்பொருள் வாணிப விபரம்

| இல | இறைச்சிக்கடை, பல்பொருள் வாணிபம் | கடை இல | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கோழியிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 666,825.23 |
| 2 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 124,736.84 |
| 3 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 336,913.04 |
| 4 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 489,735.98 |
| 5 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 549,192.02 |
| 6 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 129,017.79 |
| 7 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 313,500.00 |
| 8 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 495,000.00 |
| 9 | நாவாந்துறை கோழியிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 353,226.52 |
| 10 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 50,967.41 |
| 11 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 510,386.31 |
| 12 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 427,123.07 |
| 13 | குருநகர் கோழி இறைச்சிக்கடை | | 5,000.00 | 282,813.44 |
| 14 | நாவாந்துறை கடை (பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 218,910.61 |
| 15 | நாவாந்துறை கடை (பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 153,921.53 |
| 16 | நாவாந்துறை கடை (பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 136,921.75 |
| 17 | நாவாந்துறை கடை (பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 152,074.47 |

### சந்தை, சிற்றுண்டிச்சாலை, விளம்பர ஒலிபரப்பு சேவைகள் , ஆரியகுளம் படகோட்டல் சேவை மற்றும் நீர் விளையாட்டுகள் விபரம்

| இல | விபரம் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 6,076,737.91 |
| 2 | புங்கன்குளம் உள்ளூர் உற்பத்தியாளர்களது அறிமுகச்சந்தை | 2,000.00 | 6,910.06 |
| 3 | பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 330,550.00 |
| 4 | ஆரியகுளம் படகோட்டல் மற்றும் நீர்விளையாட்டுகள் | 5,000.00 | 165,000.00 |
| 5 | விளம்பர ஒலிபரப்பு சேவை(நவீன சந்தை கட்டிடத்தொகுதி மேல்மாடி) | 30,000.00 | 760,000.00 |
| 6 | விளம்பர ஒலிபரப்பு சேவை (செங்குந்தா சந்தைத்தொகுதியின் மீன் சந்தைக்கு மேல்) | 10,000.00 | 403,180.60 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212215978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகச் சமுகமளித்தும் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை , யாழ்ப்பாணம்.**

(C-6523)

# பதவி வெற்றிடம்

## முகாமைத்துவ உதவியாளர்கள் (இருபாலரும்)

வயது - 25 வயதுக்கு மேல்
தகைமை - உயர்தரம் கற்றிருத்தல்

**குறிப்பு - யாழ்ப்பாண நகருக்கு அண்மையாக வசிப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.**

மேலதிக தொடர்புகளுக்கு :
**076 097 3121**

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் அதிபர்
திரு.A.**ஜோன் கொலின்** அவர்களது
அன்பு மாமனார்

**T.M.அன்ரனிப்பிள்ளை L.L.B**
(சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்)

தோற்றம் 28.07.1936
மறைவு 04.05.2023

அவர்களது பிரிவால்
துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/பாஷையூர் சென்.அன்ரனிஸ்**
**றோ.க.மகளிர் வித்தியாலயம்**

(14084)

# 15 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

தோற்றம் 1949 . 08 . 10



மறைவு 2023 . 04 . 27

தொல்புரத்தை பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் நல்லூரினை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் நாகலிங்கம் செல்வநாதன்

**(ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர், மாவட்டச் செயலகம் (கச்சேரி) யாழ்ப்பாணம்)**

எமது தந்தையாரின் மரணச் செய்தியறிந்து எமது துயரில் பங்கெடுத்து நேரிலும் தொலைபேசியிலும், சமூகவலைத்தளங்களிலும் ஆறுதலும் தேறுதலும் கூறிய நண்பர்கள், உறவினர்கள், சுற்றத்தவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவி : **திருமதி கோமதிதேவி செல்வநாதன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/யாழ் மத்திய கல்லூரி)
பிள்ளைகள் : **செல்வி ஜயந்திமதி செல்வநாதன்**
(ஆசிரியை - யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)
**செல்வி ஜனனி செல்வநாதன்**
(அதிபர் - கிளி/ முரசுமோட்டை அ.த.க பாடசாலை)
**திரு. செல்வநாதன் பிரணவன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர் - போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

(14087)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய இறுதி நாள் பூஜைகள்




(வவுனியா)

வவுனியாவில் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்று 108 கலச சங்காபிஷேகமும் பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

அண்மையில் வெடுக்குநாறிமலையில் விக்கிரகங்கள் இடித்தழிக்கப்பட்ட நிலையில் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக மீள பிரதிஷ்டை செய்யப்பட்டது.

அதனைத் தொடந்து 12 தினங்கள் பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு நேற்று இறுதி நாள் பூஜைகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. (4-6-250-299)



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மலையக மக்களுக்கு 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான உதவிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவ் உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று வழங்கி வைத்திருந்தார். (படம்:-சுபேசன்)

# ஆலயத்திற்குள் நுழைந்து பெறுமதியான பொருட்கள் திருட்டு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலி பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு பெறுமதியான பொருட்கள் திருடப் பட்டிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்புக் கமராவை அடித்து உடைத்த கொள்ளையர்கள் ஆலய விக்கிரகங்களின் கீழ் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான உலோகங்கள் மற்றும் உண்டியல், பணம் ஆகியவற்றை திருடிச் சென்றிருப்பதுடன் பாதுகாப்புக் கமராவின் வன்வட்டினையும் எடுத்துச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)


## CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING (CODL)
## UNIVERSITY OF JAFFNA
### Diploma in Professional English
### Batch-III

Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna invites applications from the eligible candidates to follow the above course conducted by Department of English Language Teaching (DELT), Faculty of Arts, University of Jaffna.

**PROGRAMME OBJECTIVES**

This course has been designed to:

- Develop Basic Interpersonal Communicative Skills (BICS) and abilities in English to make them conversant in the language.
- Promote all the basic language skills: reading, listening, writing and speaking.
- Equip the professionals and students with English language proficiency for their day-to-day professional and higher educational requirements.
- Broaden the language skills of the professionals with advanced proficiency in English language structure, technical writing, advanced reading skills, business communication and presentation skills to perform confidently in any practical situation that requires a higher degree of fluency, accuracy, efficiency and effectiveness.
- Enhance adequate and uniform proficiency level in English language to meet the global and national demands in their respective fields.

**DURATION**

- The duration of the course is one year which consists of two semesters.
- Classes will be held at weekends only.

**SELECTION CRITERIA**

- A Candidate must sit for a written examination to check the ability in basic reading and writing skills.The duration of the examination is one hour.
- The candidates will be called for an interview based on the marks scored in the written examination to assess the basic oral proficiency in English.
- Based on the overall performances, 50 candidates will be selected at a time with a reserve list.

**COURSE FEE**

| | | |
|---|---|---|
| • Application Form | Rs | 500.00 |
| • Registration Fee | Rs | 750.00 |
| • Library Deposit (Refundable) | Rs | 750.00 |
| • Library Usage | Rs | 1000.00 |
| • Course Fee | Rs | 40,000.00 |
| **Total** | Rs | 43, 000.00 |

**ENTRY REQUIREMENTS**

- An applicant must have passed the G.C.E A/L Examination in all three subjects in any stream in one sitting and a pass in English at G.C.E A/L or a credit pass in G.C.E O/L.

**APPLICATION PROCEDURE**

- Application form could be obtained from the Centre for Open and Distance Learning, University of Jaffna during 9.00am to 4.00pm on weekdays.

Or

- Application form can be downloaded from website (www.codl.jfn.ac.lk)
- Duly filled application should accompany the payment slip for a sum of 500/= payable at any branch of the People's Bank.island wide using the usual deposit slip (Acc.No.- 890032 300001092). Keep a photocopy of the slip with you.
- Applications should be sent under registered cover to the **Assistant Registrar, Centre for Open and Distance Learning, University of Jaffna, Thirunelvely** on or before **10.06.2023** indicating "Diploma in Professional English" on the left hand corner of the envelope.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**

(c-6520)


# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் . நன்கொடையாளர்களின் உத்வியுடன் இலவசமாக கண்புரை சத்திரசிகிச்சையினை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான நோயாளர்களைத் தெரிவு செய்யும் கண்பரிசோதனை முகாம் நாளை மறுதினம் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் வரணி பிரதேச வைத்தியசாலையிலும் சங்கானை பிரதேச வைத்தியசாலையிலும் நடைபெறவுள்ளது.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண்பரிசோதனை முகாமில்கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயம் காரணமாக ஆர்ச்சர் விலகல்



ஐ.பி.எல் தொடர் இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில் இதுவரை எந்த அணியும் பிளே ஆப் சுற்றை உறுதி செய்யவில்லை. புள்ளிப்பட்டியலில் குஜராத் முதல் இடத்திலும் சென்னை 2 ஆம் இடத்திலும் மும்பை 3 ஆம் இடத்திலும் உள்ளன.

5 முறை சம்பியனான மும்பை அணி இந்த சீசனில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் உள்ளது. இந் நிலையில், சில ஆட்டங்களில் ஆடிய ஆர்ச்சர் காயம் காரணமாக எஞ்சிய ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகுவதாக அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகி உள்ளது.

மேலும், ஆர்ச்சருக்கு பதிலாக இங்கிலாந்தை சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் கிறிஸ் ஜோர்டானை மும்பை அணி நிர்வாக அணியில் சேர்த்துள்ளது. (4)



கனிஷ்ட பிரிவினருக்கான தேசியமட்ட வேக நடைப் போட்டியில் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர்.கௌஷியா வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

(படம்:- கனகராஜா)



கனிஷ்ட. பிரிவினருக்கான தேசியமட்ட தட்டெறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த பி.மிதுசன் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

(படம்:-கனகராஜா)



கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட தடகளத் தொடரில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் எஸ்.மிதுன்ராஜ் தட்டெறிதல் போட்டியில் 43.64 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையை பதிவு செய்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். கடந்த 2010 ஆம் ஆண்டு இராணுவ வீரர் சரித் கப்புக்கொட்டுவால் எறியப்பட்ட 42.64 மீற்றர் தூரத்தையே மிதுன்ராஜ் 43.64 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.(படம்:-கனகராசா)



யா/சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மாணவியான செல்வி. செல்வராசா கிறிஸ்ரிகா கொழும்பில் நடைபெற்ற Unior National championship போட்டியில் கோலூன்றிப் பாய்தலில் 2.6 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தை பெற்றுள்ளார்.

(படம் :- கணேசலிங்கம்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2827

### மதுசன்

சாப்பிடும் போது திட்டுவது அப்பா ஸ்டைல்...
சாப்பிட்ட பிறகு திட்டுவது அம்மா ஸ்டைல்...



என்ன சாப்பாடு என்று கேட்கும் போது திட்டுவது மனைவி ஸ்டைல்...!

### பிரணவன்

டீக்கடைக்காரன் பொண்ண கல்யாணம் முடிச்சது ஒரு வகையில நல்லதா போச்சு சகல...!!
ஏன் அப்படி சொல்றா,



என்னை அடிக்கிறதுக்கு முன்னாடி கரெக்டா, ஞாபகமா கேட்டுருவா... "லைட்டாவா" "ஸ்ட்ராங்காவா" என்று...

### துளசி




### சௌமிகா

ஏன்டா எறும்பு பவுடர் வாங்கிட்டு வரல...



நீங்க என்னண்ணே வெவரம் தெரியாம இருக்கீங்க இன்னைக்கு பவுடர் வாங்கிக்கொடுத்தா நாளைக்கு லிப்ஸ்டிக் கேக்கும், சரியா வராதுண்ணே...

### தாரணி



அம்மா என் வீட்டுக்காரர் குழிப்பணியாரம் கேட்கிறார், அதுக்கு எவ்ளோ பெரிய குழி தோண்டனும்?? உன்னைப் பெத்ததுக்கு எனக்குதான் குழி தோண்டனும், ஒரு ஆறு அடிக்கு தோண்டு.

### வித்தியா

வாழ்க்கையில ஒவ்வொருத்தனுக்கும் நடந்த ஒரு கொடுமையான விசயம்...



நாம எந்த வாத்தியாருக்கு பயந்து பள்ளிக்கூடத்துக்கு லீவு போட்டோமே... அதே நாள் அந்த வாத்தியாரும் லீவு போடுறது தான்..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சலின் தாக்கம் கணிசமாக அதிகரித்துள்ளது

## இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**எலிக்காய்ச்சலின் தாக்கம், தற்போது கணிசமாக அதிகரித்துள்ளதாக இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இதுதொடர்பாக கருத்த வெளியிட்ட. இலங்கை மருத்தவ சங்கத்தின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் சமூகநல மருத்துவ அதிகாரி குஷானி தாபரே சிறு போகம் இடம் பெறும் மார்ச் முதல் மே மாதம் வரையான காலப் பகுதியிலும் பெரும் போகம் இடம் பெறும் செப்டம்பர் முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் எலிக்காய்ச்சலின் தாக்கம் அதிகரிப்பதாகத் தெரிவித்தார்.

எனவே குறித்த காலப் பகுதியில் விவசாயிகளுக்க இது தொடர்பில் தெளிவுபடுத்தி நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றக் கொள்வதன் மூலம் எலிக்காய்ச்சல் பரவலில் இருந்த பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் வழக்கு தொடரக்கோரி ஆர்ப்பாட்டம்




(கொழும்ப)

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட சேதத்திற்கு வழக்குத் தொடர வேண்டும் என்றும் சுற்றுச் சூழலைக் கொலை செய்தவர்களை வெளிக் கொணர வேண்டும் எனவும் வலியுறுத்தி SYU மற்றும் சுற்றுச்சூழல் சிவில் அமைப்புகள் நேற்று பாராளுமன்றத்தின் முன்னிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (நி)

# மரண அறிவித்தல்

## திருமதி.சிவபாக்கியம் வீரவாகு

(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர்)-யாழ் கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயம்



பிறப்பு: -28.04.1943
இறப்பு: 09.05.2023

கோவிற்கடவை, துன்னாலை மத்தி, கரவெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சிவபாக்கியம் வீரவாகு அவர்கள் 09.05.2023 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம், சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, சோதாத்தை ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரவாகுவின் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்) அன்புத் துணைவியாரும், நந்தினி(வைத்திய நிபுணர் - யாழ்.போதனா வைத்தியசாலை), முரளிதரன் (சட்டத்தரணி), யாழினி(ஆசிரியர்-யா/ஞானச்சாரியார் கல்லூரி) அமரர் மனோரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானப்பிரகாஷ்(வைத்தியர்-யாழ். போதனா வைத்தியசாலை), அனுசா (வங்கி உத்தியோகத்தர் இலங்கை வங்கி வடமாகாணம்) முரளி (அதிபர் யா/கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்) சங்கர் (கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவு சங்கம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கமலம்மா, பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆராதனா, ஆர்த்தி, சஞ்சீவி, சுரேன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செல்வக்குமாரி, விமலகுமாரி, சாந்தகுமாரி, சிவகுமார், சந்திரகுமார், நந்தகுமாரி, வசந்தகுமாரி, காலஞ்சென்றவர்களான சுதாமதி, தனமதி ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.05.2023 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் பூதவுடன் வேருண்டை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோவிற் கடவை, துன்னாலை மத்தி, கரவெட்டி. 077 773 8172**

**தகவல்**
**குடும்பத்தினர்.** சி-6524




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்ரிக் பொம்மைகளால் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு ஆபத்து

(கொழும்பு)

பிளாஸ்டிக் பொம்மைகள் சிறு குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கு பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்துவதால், பிளாஸ்டிக் பொம்மை மற்றும் விளையாட்டு பொருட்களின் விற்பனையை கட்டுப்படுத்துவதில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை கவனம் செலுத்தியுள்ளது.

பிளாஸ்டிக் விளையாட்டு பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை கட்டுப்படுத்துவது குறித்து அந்த ஆணையத்தில் பல விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த பொம்மைகளில் பிளாஸ்டிக் மட்டுமின்றி பல்வேறு இரசாயனங்கள் அடங்கிய பல்வேறு வகையான வர்ணங்களும் பயன்படுத்தப்படுவதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் சரோஜனி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பிளாஸ்டிக் உட்கொள்வதால் பல்வேறு உடல்நலக் கோளாறுகள் ஏற்படுவதால் மரத்தால் செய்யப்பட்ட பொம்மைகளை குழந்தைகளுக்குக் கொடுப்பதில் பெற்றோர்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். (நி)


## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF TECHNOLOGY

University of Jaffna will entertain applications from the qualified persons for the post of Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (unconfirmed) /Lecturer (Probationary) in ***Biosystems Technology / **Engineering Technology / ***Interdisciplinary Studies.**

**Note:**

* For positions in **Biosystems Technology**, special consideration will be given to those who have degrees in Biosytems Technology or any other related degrees specialized in one or more of the following fields:

- Food production Technology/Food Science and Technology/Food Science
- Commercial Green farming Technology/Agricultural Science

**For positions in **Engineering Technology**, special consideration will be given to those who have degrees in Technology or Engineering, specialized in one or more of the following fields;

- Construction Technology/Civil Engineering
- Automobile Technology/Mechanical Engineering
- Electro Technology/Electrical & Electronic Engineering

***For positions in **Interdisciplinary Studies**, special consideration will be given to those who have degrees in following fields;

- Physical Science graduates who have special degree in **Mathematics** with the combination of either physics or computer science.
- Graduates who have obtained Bachelor of Business Administration (Honours) degree specialized in **Human Resource Management.**

**Those who applied for the above posts in response to the advertisement dated 26.01.2022 (Closing date 28.02.2022) are not required to apply again. However if they wish to update with recent achievements or qualifications, they are advised to apply again in response to this advertisement.**

Special Note: **After processing the applications, appointments will be made in concurrence with UGC and the Treasury.**

Those who wish to apply are strongly advised to visit our University Website **www.jfn.ac.lk** for all the relevant details including remuneration package and statutory benefits.

**Closing date:**

Applications should reach us on or before 05.06.2023.

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank in favour of University of Jaffna **Collection Account Number: 970000090000387** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than one** post should submit **separate application** for each along with separate **bank slip**. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications shall be sent to the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka** under registered post with the photocopies of Statement of the Degrees and Service Certificates. **Submission of applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Applications and referee reports should be in the relevant format. Incomplete and illegible applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**

(C-6519)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தவர்கள் உட்பட

# 41 இலங்கையர்களை நாடு கடத்தியது அவுஸ்திரேலியா

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு சென்ற 41 இலங்கையர்கள், அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் நாடு கடத்தப்பட்டு இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் நாடு கடத்தப்பட்ட குறித்த 41 பேரும், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் மீன்பிடி இழுவை படகுகளில் கடல் வழியாக பயணம் செய்து அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முயற்சித்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவுஸ்திரேலிய எல்லையில் வைத்து, கைது செய்யப்பட்ட இவர்கள், நாடு கடத்தப்படாமல் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணம் மற்றும் வாழைச்சேனை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதற்கமைய தேசிய புலனாய்வு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் பின்னர், சந்தேக நபர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 'புலிட்சர்' விருதுக்கு இலங்கையர் பெயர் பரிந்துரை




(கொழும்பு)

ஊடகவியலாளர் ஒருவர் வெல்லக்கூடிய உலகின் மிகவும் முக்கிய விருதாக விளங்குகின்ற புலிட்சர் விருதுக்கு இலங்கையின் புகைப்பட ஊடகவியலாளர் ஒருவர் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இந்த விருதுக்கான இறுதிப் பட்டியலில் புகைப்பட ஊடகவியலாளர் எரங்க ஜயவர்தனவின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவருடன் இந்த விருதுக்கான இறுதிப் பட்டியலுக்கு பரிந்துரைக்கப்பட்ட மற்றைய புகைப்பட ஊடகவியலாளரும் இலங்கையில் கடந்த வருடம் எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்த இளைஞர்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் புகைப்படங்களை எடுத்தமைக்காக குறித்த விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். (நி)

# பணிப்பகிஸ்கரிப்பினால் ரயில் சேவைகள் இரத்து

(கொழும்பு)

ரயில் நிலைய பொறுப்பதி காரிகளின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நேற்றுக் காலை 5 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரதி பொது முகாமையாளர் பதவிக்கு அதிகாரியொருவரை நியமிப்பது தொடர்பான பிரச் சினையை முன்வைத்து இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன் னெடுக்கப்படுவதாக ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங் கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்துள்ளார். (நி)

# சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இலங்கை வருகை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர்கள் குழுவொன்று இன்று இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

இந்த வருடத்தின் பிற்பகுதியில் முதல் மறுஆய்வு பணிக்கு முன்னதாக, இலங்கையுடன் வழக்கமான ஆலோசனைகளின் ஒரு பகுதியாக இந்த விஜயம் அமைகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்திய பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசனும் இந்த பயணத்தில் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



# ஜி.எஸ்.பி சலுகைக்காக இலங்கை மீண்டுமொரு முறை விண்ணப்பிக்க வேண்டும்

## அலிசப்ரி தெரிவிப்பு

(கொழும்பு)

2024 முதல் 2034 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், திருத்தப்பட்ட அளவுகோலின் கீழ், ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகைக்காக, இலங்கை மீண்டும் ஒரு முறை விண்ணப்பிக்க வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம், 2021 ஆம் ஆண்டில், அடுத்த பத்து ஆண்டு காலத்திற்கான ஒரு சட்ட முன்மொழிவை ஏற்றுக் கொண்டது.

எனினும் தற்போதைய ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை விதிமுறை, இந்த ஆண்டு இறுதியுடன் காலாவதியாக உள்ளது.

இந்தநிலையில், ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகைக்காக மீண்டும் விண்ணப்பிப்பதற்கான அனுமதியைக் கோரி கூட்டு அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை ஐரோப்பிய வெளிவிவகார சேவையின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பாவ்லா பாம்பலோனியுடன் பேச்சுச் வார்த்தை நடத்தியதாக அமைச்சர் தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தின் விதிகள் குறித்து அவர் தமது அதிருப்தியை வெளியிட்டதாகவும் அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார். (நி)


## வட இலங்கைச் சங்கீத சபை
மருதனார்மடம் - சுன்னாகம்
2023 ஆம் ஆண்டுக்கான பரீட்சைகள்

வட இலங்கைச் சங்கீத சபையினால் 2023 ஆம் ஆண்டு கோரப்பட்ட தரம் 1 தொடக்கம் 6 வரையான தரங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் 2023 யூன் மாத இரண்டாம் வாரத்திலிருந்து வரும் ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் அறிமுறைப் பரீட்சைகள் 29.07.2023, 30.07.2023 (சனி, ஞாயிறு) ஆகிய தினங்களிலும் அகில இலங்கை ரீதியாக நடைபெறவுள்ளது. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

**செயன்முறைப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள்**

தரம் 1, 2 - யூன் மாதம் 11, 12, 17, 18, 24, 25
தரம் 3,4 -யூன் மாதம் 17, 18, 24, 25
தரம் 5, 6 -யூலை மாதம் 01, 02, 08, 09, 15, 16

தரம் 5,6 இற்கான செயலமர்வு யூன் மாதம் **23,24,25** ஆகிய தினங்களில் வட இலங்கைச் சங்கீத சபை மண்டபத்தில் நடைபெறும்.

(சி-6518)

மு. இராதாகிருஸ்ணன் தலைவர்,
வட இலங்கைச் சங்கீத சபை மருதனார்மடம்- சுன்னாகம்.



## பதவி வெற்றிடம்

Eu Lanka @ Forum
(Tamil & English Typist)

**கல்வித் தகைமை.**

- GCE A/L.
- வயதெல்லை 25 -35.
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
- யாழ்.மாநகர எல்லைக்குள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்ப முடிவு திகதி 30.05.2023.

விண்ணப்பங்களை மின்னஞ்சல் ஊடாகவும் கீழ் காணும் முகவரியிலும் சமர்ப்பிக்க முடியும் (முழுமையான சுய விபரக்கோவை அவசியம்)

**தொடர்புகளுக்கு,**
Eu lanka @ Forum
rameulanka@gmail.com
**இல.235 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.** **021-223 2072** **077-271 1181**

(14078)


# அவுஸ்திரேலியாவுக்கு ஆட்களை அனுப்ப முயன்ற குழு கைது

(கொழும்பு)

33 பேரை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்ல முயன்ற 5 கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களை நீர் கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியதன் பின்னர் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 33 பேரும் தலா 2 இலட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 220 |
| பச்சைமிளகாய் | 180 | 140 | 200 | 200 |
| தக்காளி | 200 | 250 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 180 | 300 | 250 |
| கரட் | 120 | 200 | 150 | 250 |
| பூசணி | 60 | 40 | 50 | 80 |
| புடோல் | 120 | 140 | 120 | 150 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 120 | 140 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 100 | 140 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 250 | 200 | 280 | 200 |
| லீக்ஸ் | 280 | 280 | 300 | 350 |
| பீற்றூட் | 250 | 250 | 200 | 300 |
| கறிமிளகாய் | 200 | 300 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 400 | 800 |
| போஞ்சி | 350 | 350 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 100 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 120 | 200 |
| தேசிக்காய் | 400 | 350 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 200 | 250 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | 400 | 600 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | -- | 150 | -- |

# இராசிபலன்

**11.05.2023**
**சித்திரை 28, வியாழக்கிழமை**
**சஷ்டி பிற்பகல் - 1.13 மணிவரை**

**உத்தராடம் பிற்பகல் 4.21 மணிவரை**
**சுபநேரம் -7.24-8.54 மணிவரை**
**இராகுகாலம்-1.24-2.54 மணிவரை**

**சந்திராஷ்டமம் - மிருகசீரிடம் திருவாதிரை.**

**வளவன்**

**மேஷம்:** செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், இனிமையான நாள்.

**கடகம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு வரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்:** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் செல்லும், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும்.

**ரிஷபம்:** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்:** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்:** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், சயனசுகக் குறைவான நாள்.

**மிதுனம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**கன்னி:** உதிரி வருமானங்கள் பெருகும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மீனம்:** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியலாம், தேவைகள் பூர்த்தியாகும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**அடைவதற்கு ஆசைப்படுகிறவன் இழப்பதற்கு தயாராக இருக்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண

# சுகாதார பணிப்பாளர் பதவியிலிருந்து வெளியேறினார் திலீப்லியனகே

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதார பணிப்பாளர் வடக்கிலிருந்து வெளியேறி மத்திய சுகாதார அமைச்சின் கீழ் உள்ள தனியார் வைத்தியசாலைகளுக்கு பொறுப்பான பிரிவுக்கு செல்ல உள்ளார்.

விடயம் தொடர்பில் தெரிய வருவதாவது. வடமாகாண சுகாதார பணிப்பாளராக இருந்த வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரன் யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளராக கடமைகளை பொறுப்பேற்ற நிலையில் கொழும்பிலிருந்து வடமாகாண சுகாதார பணிப்பாளராக திலீப் லியனகே மத்திய சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டார்.

இவருக்கு நியமனம் வழங்கப்பட்ட போது வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாக்ராஜா சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட நிலையில் ஆளுநரின் அனுமதி கேட்கப்படாமல் குறித்த நியமனம் வழங்கப்பட்டது. இந்நிலையில் வடமாகாண ஆளுநர் அவரது நியமனத்தை ஏற்காத நிலையில்வடமாகாண சுகாதார பணிப்பாளர் வசம் இருந்த நிதி அதிகாரங்களுக்கு ஆளுநர் கட்டுப்பாடு போட்டார்.

இவ்வாறான நிலையில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மத்திய சுகாதார அமைச்சின் செயலாளருக்கு எனது அனுமதியின்றி மத்திய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட நியமனத்தை மீளப் பெறுமாறு எழுத்து மூலம் கடிதம் எழுதிய நிலையில் வடக்கிலிருந்து அவர் கொழும்புக்கு மாற்றப்பட்டார். (4-6-104)

# காணி பிணக்குகள் தொடர்பான தெளிவூட்டும் கருத்தமர்வு

(மன்னார் )

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராம அலுவலர்கள் மற்றும் காணி தொடர்பாக கடமையாற்றும் அதிகாரிகளுக்கு காணி பிணக்குகள் மற்றும் காணி சட்டம் தொடர்பாக தெளிவூட்டும் கருத்தமர்வு நேற்று புதன் கிழமை காலை 9 மணியளவில் மன்னார் பிரதேசச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்றகுறித்த கருத்தமர்வில் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப். ஓய்வு நிலை காணி ஆணையாளர் குருநாதன் ஆகியோர் கலந்து கொண்டதோடு கிராம அலுவலர்கள் மற்றும் காணி தொடர்பாக கடமையாற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன் போது காணி தொடர்பாக ஓய்வு நிலை காணி ஆணையாளர் குருநாதன் பல்வேறு விளக்கங்கள் வழங்கினார்.

குறிப்பாக காணி பிணக்குகள் ஏற்படும் போது எவ்வாறு அவற்றிற்கு இலகுவாக தீர்வு காண்பது குறித்து தெழிவூட்டப்பட்டது. மேலும் காணி சட்டங்கள் குறித்து தெளிவு படுத்தப்பட்டதோடு. வருகை தந்த அதிகாரிகள் தமது சந்தேகங்களை கேட்டறிந்து கொண்டனர். (4-6-285)

# திருமுறை மனனப்போட்டி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை- சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக்கழகம் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையையொட்டி நடத்திய திருமுறை மனனப்போட்டியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலய அதிபர் க.கலியுகன் முதன்மை விருத்தினராக கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களையும். சான்றிதழ்களையும் வழங்கவுள்ளார்.

திருமுறை மனனப்போட்டியில் தரம் 1 இல் முதலாமிடம் ச.ஆருதி தெல்லிப்பழை மழலைகள் பூங்கா. இரண்டாமிடம் ர.ருபஸ்னா காரைநகர் கிழவன் காடு கலா மன்றம். மூன்றாமிடம் வஸ்தனா வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்.

தரம் 2 இல் முதலாமிடம் ர.சிவதீஷ் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. இரண்டாமிடம் ஸ்ரீ.கிரிஷிகா யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. மூன்றாமிடம் சி.பிரணவன் காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்.

தரம் 3 இல் முதலாமிடம் தித்சனா கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை. இரண்டா மிடம் பி.சுபிக்ஷா அளவெட்டி அருணோதயாக் கல்லூரி. மூன்றாமிடம் தா.மஹதி மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை. ஆகியோர் முதல் மூன்ற இடங்களில் பரிசில்களை பெறவுள்ளனர். (4-6)

## அந்தி இழைக்கப்படுவதாக தெரிவித்து

# மன்னாரில் மணல் அகழ்வில் ஈடுபடும் தொழிலாளர்கள் போராட்டம்



(மன்னார்)

முறையான அனுமதிப்பத்திரங்கள் பெற்று பல வருடங்களாக மணல் அகழ்வில் ஈடுபடும் தொழிலாளர்கள் இணைந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்தின் முன்பு போராட் டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் பக்கச்சார்பாக செயல்படுவதாக கூறி குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்கள் வாகனங்களையும் நானாட்டான் பிரதேச செயலகத்தின் முன் நிறுத்தி கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் முருங்கன் விகாராதிபதி கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முழு ஆதரவினையும் வழங்கியிருந்தார்.

இதன் போது போராட்டகாரர்கள் கருத்து தெரிவிக்கையில். நானாட்டான் பிரதேசத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு மணல் அனுமதியானது மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் காதர் மஸ்தானால் நிறுத்தப்பட்டுள்ளது.

முசலி பிரதேசத்திற்கு மாத்திரம் மணல் அகழும் அனுமதி வழங்கி நானாட்டான் பிரதேச தொழிலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவது ஏன் என்று கூலித் தொழிலாளர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

பாராளுமன்ற உறுப் பினர் மஸ்தான் இந்த செயற்பாடுகள் மூலம் சகோதரர்களாக வாழ்ந்து வரும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே முரண்பாடுகளை தோற்றுவிக்க முனைப்பு காட்டுகிறாரா? என்னும் சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே இந்த மணல் ஏற்றும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு நானாட்டான் பிரதேசத்தில் முன்பு வழங்கப்பட்ட மணல் அகழும் அனுமதி மீண்டும் வழங்க வேண்டும் என்று தெரிவித்தனர். (4-6-285)

# விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலமே போதைப்பாவனையை குறைக்க முடியும்

## உளநல வைத்தியர் ஜெயராசா

(கண்டாவளை)

சமூகத்தில் ஏற்படுகின்ற விழிப்புணர்வின் மூலம் தான் போதைப் பொருள் பாவனையை குறைக்க முடியும் என்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளநல வைத்தியர் மா.ஜெயராசா தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி மாவட்டத்தில் போதை பொருள் பாவனை தடுப்பது தொடர்பிலான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று கிளிநொச்சி மாவட்ட பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று பகல் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. இதில் வளவாளராக கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து குறிப்பிடுகையில் யுத்தத்துக்கு பின்னர் இந்த போதை பொருள் பாவனை அல்லது மது பாவனை என்பது அதிகரித்து காணப்படுகின்றது.

இதனால் பல்வேறுபட்ட சமூகப் புரள்வான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றது. இவற்றிலிருந்து நமது சமூகத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் அவைரிடத்திலும் இருக்கின்றது அந்த வகையிலே போதைப்பொருள் அல்லது மதுப் பாவனை தொடர்பான விழிப்புணர்வு என்பது தொடர்பில் கிராம மட் டங்களிலே இருக்கின்ற சிறு சிறு குழுக்கள் ஒன்றிணைந்து விழிப்புணர்வு ஊட்டுவதன் மூலம் இந்த போதைப்பொருள் பாவனையில் இருந்து இளம் சமூகத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-315)



கிளிநொச்சியில் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றுள்ளது. (படம்: தேவானந்தன். யதுபாஸ்கரன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

முகநூல் தரிசனம் 141

## ஆடம்பர வாழ்க்கையை விரும்பாத சாக்ரடீஸ்



சாக்ரடீஸ் ஒருமுறை கிரேக்க நாட்டின் தலைநகர் ஏதென்ஸின் அங்காடித் தெருக்களில் சுற்றிக்கொண்டே வந்தார்.

நாலைந்து தெருக்களின் உள்ளே நுழைந்து கடைகளில் உள்ள பொருட்களையெல்லாம் கூர்ந்து கவனித்தார். ஆனால் பொருட்கள் எதுவும் வாங்கவில்லை.

பின்னர், மறுநாளும் அங்காடித் தெருவில் நுழைந்து கடைகளில் உள்ள பொருட்களைக் கூர்ந்து நோக்கிய வண்ணம் நடந்து சென்று விட்டார்.

இப்படியே ஒரு வாரமாக அங்காடித் தெருக்களில் பல கடைகளை சுற்றிப் பார்த்து விட்டுச்சென்று விட்டார். ஏழாம் நாள்... சாக்ரடீஸ் அங்காடித் தெருவில் உலா வருவதைக் கண்ட ஒரு கடைக்காரர்,

"அய்யா நானும் கடந்த ஆறு நாட்களாகப் பார்த்துக் கொண்டே வருகிறேன். கடைத்தெரு வழியே வருகிறீர்கள்.. கடையில் உள்ள பொருட்களைப் பார்க்கிறீர்கள்.. ஆனால் இது நாள் வரையிலும் எந்தப் பொருளையும் வாங்கவே இல்லை!

உங்களுக்கு எந்தப் பொருள் வேண்டும் என்று சொன்னால், நான் அந்தப் பொருளை வரவழைத்துத் தருவேனே?" என்று கேட்டார்.

அதற்கு சாக்ரடீஸ், அன்புள்ளம் கொண்ட கடைக்காரரே... இங்குள்ள பல கடைகளில் உள்ள பொருட்கள் எவையும் என் வீட்டில் இல்லை!

"இந்தப் பொருட்கள் எவையும் இல்லாமல் என்னால் வாழ முடிகிறதே!" என்று எண்ணிப் பார்த்து ஒவ்வொரு நாளும் மகிழ்கிறேன்... எனக் கூறினாராம்.

கடைக்காரர் வியந்துபோய் விக்கித்து நின்று விட்டா ராம்! ஆம், நமது வாழ்க்கைக்கு தேவைப்படாத பொருட்கள் நம்மிடம் இருப்பதை விட இல்லாதபோது தான் அதிக சந்தோஷத்தை கொடுக்கும்...

ஆகவே, ஆடம்பர மோகத்தில் அத்தியாவசியத்தை தவற விட்டு விடக்கூடாது...

## இம்ரான்கான் கைது
### ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம்



இம்ரான்கான் சென்றிருந்த நிலையில், துணை இராணுவப் படையினரால் இம்ரான் கான் கைது செய்யப்பட்டார்.

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் அண்மையில் கைது செய்யப்பட்டதையடுத்து, அவரின் ஆதரவாளர்கள் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல்களும் ஏற்பட்டன. இதனால் சுமார் இருவர் உயிரிழந்ததாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. பல வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

முன்னாள் பிரதமரும் பிரிஜ கட்சியின் தலைவருமான இம்ரான்கானுக்கு எதிராக பல வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், முன்பிணை கோருவதற்காக, இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை இம்ரான்கான் சென்றிருந்த நிலையில், துணை இராணுவப் படையினரால் இம்ரான் கான் கைது செய்யப்பட்டார்.

அல் காதிர் நம்பிக்கை நிதியம் தொடர்பான லஞ்சக் குற்றச்சாட்டு வழக்கில் இம்ரான்கான் கைது செய்யப்பட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சில ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவத்துக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். லாகூரில் படைத் தளபதியின் வாசஸ்தலம் மற்றும் ராவல் பிண்டியிலுள்ள இராணுவத் தலைமையகம் ஆகியவற்றுக்கு முன்னாலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இஸ்லாமாபாத், பெஷாவர் மற்றும் பல இடங்களில் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கராச்சி, லாகூரில் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு பொலிஸார், கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர். (நி)

### பாலத்தில் சென்ற பேருந்து
## கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழப்பு
### இந்தியாவில் சோகம்



(டில்லி)

இந்தியாவில் மத்திய பிரதேசத்தில் பாலத்தில் சென்ற பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்தது சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மத்திய பிரதேசத்தில் கார்கோனில் உள்ள பாலத்தில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 20 பேர் வைத்திய சாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். விபத்து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர். (நி)

### வாராந்தம் 10 பேரிற்கு
## மரண தண்டனை நிறைவேற்றும் ஈரான்
### ஐக்கிய நாடுகள் சபை தகவல்

**(டெஹ்ரான்)**

**ஈரானில் வாராந்தம் சராசரியாக 10 இற்கும் அதிகளவானோர் தூக்கிலிடப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 209 பேரை ஈரான் தூக்கிலிட்டுள்ளதுடன், அதில் பெரும்பாலானோர் போதைப் பொருள் தொடர்பான குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

ஆயினும் உண்மையான எண்ணிக்கை அதனிலும் அதிகமாக இருக்கலாம் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

இவ்வருடம் வாராந்தம் சராசரியாக 10 பேரை ஈரான் தூக்கிலிடுவதாக வும் கடந்த வருடம் 580 பேர் தூக்கிலிடப்பட்டுள் ளதாகவும் மனித உரிமை களுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் துர்க் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை, சுவீடன் ஈரானியர் ஒருவரை பயங்கரவாத குற்றச்சாட்டில் ஈரான் தூக்கிலிட்டமைக்கு சுவீடன், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன இதற்கு கண்டனம் தெரிவித்திருந்தன.

அது மட்டுமின்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை இறை நிந்தனை குற்றச்சாட்டில் இருவர் தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

கடந்த 14 நாட்களில் குறைந்தபட்சம் 45 பேர் தூக்கிலிடப்பட்டனர் எனவும், இவர்களில் 22 பேர் சிறுபான்மை பலோச் இனத்தை சேர்ந்தவர்கள் எனவும் ஐ.நா. மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## ரஷ்யா -உக்ரைன் போருக்கு மேற்கத்தைய நாடுகளே காரணம்
### உலக நாடுகளை சாடிய புடின்



(மொஸ்கோ)

ஒட்டுமொத்த உலகமும் ரஷ்யாவுக்கு எதிராக உள்ளதாகவும் ரஷ்யாவிற்கு எதிராகப் போர் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாகவும் அந் நாட்டு ஜனாதிபதி புடின் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரஷ்யாவின் வெற்றி விழா அணிவகுப்பில் கலந்து கொண்ட ரஷ்ய ஜனாதிபதி புடின், உக்ரைன் போர் குறித்து சில முக்கிய கருத்துக்களைத் தெரிவித்ததுடன் மேலும், மேற்கத்திய நாடுகளையும் அவர் கடுமையாகச் சாடினார்.

இப்போது நாம் மிகவும் இக்கட்டான ஒரு சூழலில் இருக்கிறோம். மேற்கத்திய நாடுகள் தரும் நெருக்கடியை உக்ரைன் சண்டைக்குக் காரணமாக இருக்கிறது. மேற்கத்திய நாடுகளின் உக்ரைன் ஆதரவு நிலைப்பாடே இந்த சூழலை ஏற்படுத்தியுள்ளது.

சில குறிப்பிட்ட மேற்கத்திய நாடுகள் திட்டமிட்டு உலகெங்கும் மோதல்களைத் தூண்டிவிட்டு, சதி செய்கிறார்கள். இங்கே நமது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி அழிக்க வேண்டும் என்பதை அவர்களின் குறிக்கோளாக இருக்கிறது. இதை நாம் எப்படியாவது முறியடிக்க வேண்டும். நாங்கள் ஏற்கனவே சர்வதேச பயங்கரவாதத்தை முறியடித்துள்ளோம். நாங்கள் கிழக்கு உக்ரைனின் டான்பாஸ் மக்களைப் பாதுகாப்போம். அனைத்து பகுதி மக்களையும் நிச்சயம் பாதுகாப்போம்" என்றும் அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோயல் கல்லூரி-கொழும்பு
# க.பொ.த (சா/த) மூன்றாம் தவணைப் பரீட்சை
# தமிழ் பகுதி - II, III

## பகுதி II

1) சுருக்கமான விடை எழுதுக.

i. பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
"உண்பதுவு முறங்குவது மூர்க்கதைகள் பேசுவதும்..."

ii. "இஞ்சால வா மகன் மையதத தூக்கப் போறாக.."
மேற்படி பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.

iii. "புலன ழிந்தொரு புத்துயி ரெய்துவேன்"
இதன் எழுவாய், பயனிலைகளைத் தருக.

iv. பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இட்டு எழுதுக.
ஆகா அதற்கென்ன நன்றாகப் பேசலாமே என்றார் இராமநாதன்

v. முன்னாள் இலங்கையின் ஜனாதிபதி அமெரிக்காவிற்குப் பயணமானார். இங்கு இடம் பெற்றுள்ள மயக்கத்தை நீக்கி திருத்தி எழுதுக.

vi. "ஒருகை பார்த்தல்" என்ற மரபுத்தொடரின் பொருள் யாது?

vii. "கலை" என்ற சொல் பெயராகவும், வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

viii. அழகான பையன் விரைவாக ஓடி வந்தான் இவ் வாக்கியத்தில் இடம் பெறும்வினையெச்சம் யாது?

ix. நான் இணையத்தின் உதவியுடன் நூல்களை வாசித்தேன். இச் செய்வினை வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

x. நான் அந்த வேலையைச் செய்ய மாட்டேன் . இங்கு இடம்பெற்றுள்ள எதிர்மறை இடை நிலை யாது?

2) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

அ) இன்று எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. எமது நாட்டைக் கட்டிக்காக்க வேண்டுமெனில் இன ஐக்கியம் மிகவும் முக்கியமானதாகும். இது தொடர்பான ஓர் விளக்கக்கட்டுரை.

ஆ) இன்றைய கால கட்டங்களில் கூட்டுக் குடும்பங்கள் அருகிவருகின்றன. மனிதன் சுயநலமாக வாழ முயல்கின்றான். இதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. கூட்டுக் குடும்பமே சிறந்தது எனக்கூறும் ஒருவருக்கும் தனிக் குடும்பமே சிறந்தது எனக்கூறும் இன்னொருவருக்கும் இடையிலான உரையாடல்.

இ) முதியவர்கள் பேச்சை இன்று கேட்டு நடப்பவர்களை விரல்விட்டு எண்ணலாம். இன்று பலர் முதியோர்களை வீட்டில் வைத்திருக்காது முதியோர் இல்லங்களில் சேர்த்து வருகின்றனர். முதியோரைப் பேணுவதும் மதிப்பளிப்பதும் எமது கடமை என்பதை வலியுறுத்தி ஓர் மேடைப்பேச்சு.

ஈ) குமுதன் இவ்வுலகில் எதிர்நீச்சல் போட்டு ஓர் வைத்தியராகி விட்டான். பத்து வருடங்களுக்கு முன் பல சோதனைகளையும், வேதனைகளையும் தாண்டி தான் பிறந்த மண்ணை விட்டு வெளியேறியவன் இன்று அவனது சொந்த ஊரிலே வைத்திய சாலையில் நியமனம் பெற்றுள்ளான். நியமனக் கடிதத்தைக் கையில் எடுத்த அவனுடைய சிந்தனைகள் பின்னோக்கிச் செல்கின்றன. இதனை மையமாக வைத்து ஓர் சிறுகதை.

3) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக).

கற்கப்படும் நூல்களுக்குக் கருவியாய் இருப்பவை எண்ணும் எழுத்தும் ஆகும். எண் என்பது கணிதம், எழுத்து என்பது இலக்கணம். இவ்விரண்டும் மக்களுக்கு இரு கண்கள் என்று அறிஞர் சிறப்பித்துச் சொல்வர் ஏனெனில் இவ் விரண்டினையும் பெற்றவர் ஞானக் கண்ணைப் பெற்றவராதலின் அவர் தாம் இருக்கும் இடத்திலல்லாமல் வெவ்வேறு இடத்தில் உள்ள பொருள்களையும் தாம் உள்ள காலத்திலல்லாமல் வெவ்வேறு காலத்திலுள்ள பொருள்களையும் காண்பர்.

இவ்விரண்டினையும கல்லாதவர் எல்லா இடத்திலும் எல்லாக் காலத்திலும் உள்ள பொருள்களையும் காணும் ஆற்றலைப் பெற்றிலர். நோய் முதலியவற்றாலே துன்பஞ் செய்யும் ஊனக்கண்ணையே உடைமையின் அவர் கண்ணுடையராகார் : புண்ணுடையரே ஆவர்.

மக்களின் வாழ்நாள் சில. அவர்களின் அறிவும் சிறிதே. அக் குறுகிய ஆயுட்காலத்திற் பிணியோ பல. ஆனால் கல்வியோ கரையில்லாதது ஆதலின் எல்லா நூல்களையும் கற்றல் இயலாது அன்னப் பறவையிடத்துப் பாலையும் நீரையும் கலந்து வைப்பின், அது நீரைப் பிரித்து நீக்கிப் பாலையே பருகுமாம். அது போல நாம் அறம் பொருள், இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருளை உணர்த்தும் நூல்களையே கற்றல் வேண்டும். அவற்றை உணர்த்தாதவற்றைக் கற்றலாகாது.

4) பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

நாகரிகத்தையும் பண்பாட்டையும் பிரித்து நோக்குவதாலேயே பண்பாடு நல்லது என்றும் நாகரிகம் கூடாது என்றும் கருதுபவர்கள் தோன்றியுள்ளனர். "இப்போதைய நாகரிகத்தினால் தான் நமது பண்பாடு கலாசாரம் யாவும் அழிந்து கொண்டு போகின்றது" என்று பலர் சொல்லக் கேட்கிறோம். நாகரிகத்தின் மீது பெரும் பழி விழுகின்றது. உண்மையில் நாகரிகம் என்பதன் எண்ணக்கருவைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்களினால் தான் நாகரிகத்திற்கு இந்த அவப்பெயர் வந்தது.

நாகரிகம் சுட்டுவது மனித இனத்தின் அறிவு, ஆற்றல் திறன்கள் வல்லபங்கள் ஆகியவற்றின் விருத்தியையும் அவற்றின் துணையால் ஏற்பட்ட பல்துறை விருத்தியையுமே ஆகும்.
அபிவிருத்தி என்பது ஆக்கபூர்வமாக அமைவது : அழிவிற்கே உடந்தையாக இருப்பது அல்ல. துர்அதிட்ட வசமாக தற்காலத்தில் நாகரிகத்தை உருவாக்கும் அறிவு, ஆற்றல், திறன்கள் முதலியன பெரும்பாலும் அழிவிற்கே இட்டுச் செல்கின்றன. அதனால் நாகரிகம் என்றதுமே மக்கள் மனதில் எதிர் மறையான எண்ணமே தோன்றி விடுகின்றது.

1. எதிர் மறையான எண்ணமே தோன்றி விடுகின்றது.
2. இப்பந்தியில் ஆசிரியர் கூறும் பிரதான விடயம் யாது?
3. நாகரிகத்திற்கு அவப்பெயர் ஏற்படக் காரணம் யாது?
4. நாகரிகம் சுட்டுபவை யாவை?
5. அபிவிருத்தி என்றால் என்ன?

பண்பாடு நல்லதென்றும் நாகரிகம் கூடாதென்றும் கூறக் காரணம் யாது?

5) இன்றைய காலகட்டத்தில் போதைப்பொருள் என்பது வயது வித்தியாசமின்றி எல்லோரையும் ஆட்டிப்படைக்கின்றது. இதனால் மக்கள் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.
இது பற்றிய விடயங்களைப் பத்திரி கையில் பிரசுரிக்குமாறு பத்திரிகை ஆசிரியருக்கு 100 சொற்களில் ஓர் கடிதம் எழுதுக.

அல்லது

இன்று எமது நாட்டில் மின்னல் தாக்கத்தினால் அதிகளவு உயிரிழப்புக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.
இதிலிருந்து உயிரையும், உடமைகளையும் பாதுகாப்பதற்கு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 100 சொற்களில் ஓர் துண்டுப்பிரசுரம் எழுதுக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பகுதி III

அறிவுறுத்தல்களுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக

சுருக்கமான விடை தருக.

i. "பார்த்து உண்ணுந் தன்மையிலாளர் அயல் இருப்பும்..."

அ) இங்கு கூறப்பட்ட சிறப்பற்ற பண்பு எது?
ஆ) இப்பாடலடி இடம் பெறும் நூலின் ஆசிரியர் யார்?

ii. 'மூடித்திறக்கின் முகங்காட்டும்......'

அ) இதன் பொருளைத் தருக.
ஆ) இது எவ்வகைப் பாடலாகும்?

iii. 'பத்தாயிரம் கோடி காய்கள்' என்று சரீ கணக்காகச் சொன்னானாம்......

அ) இங்கு கூறப்பட்ட கலை யாது?
ஆ) இக் கூற்று இடம்பெறும் சிறுகதை ஆசிரியர் யார்?

iv. "கைவிடுவேன் என்று எண்ணிக் கவலைப்படாதே கன்னி அல்லா மேல் ஆணை உன்னை அடையாட்டி காட்டுப்பள்ளி..."

அ) இங்கு கூறப்பட்ட உயர்ந்த பண்பு யாது?
ஆ)காட்டுப்பள்ளி என்பதன் பொருள் யாது?

v. "கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழா அத்துப் பேதை புகல்"

அ) இங்கு கையாளப்பட்டுள்ள அணியைக் குறிப்பிட்டு விளக்குக.
ஆ) 'கழா அக்கால்' என்பதன் பொருள் யாது?

vi. 'நரகம் புகினும் எள்ளேன்...'

அ) இவ்வாறு கூறியவர் யார்?
ஆ) அவருடைய இலட்சியம் யாது?

vii. "எனது சிரசில் சௌந்தர்ய கிரீடம் சூடியதான மிதப்பு, விலாவிரண்டிலும் சிறகுகள் முளைத்து காற்றில் எம்பத் தொடங்கி விட்டேன்"

அ) சௌந்தர்யம், கிரீடம் என்பவற்றின் பொருளைத் தருக.
ஆ) இக் கூற்றில் வெளிப்படும் உணர்வு யாது?

viii. "தேனருவி என் வழியும் ஏருழவன் வியர்வை...."

அ) இங்கு கையாளப்பட்ட அணியைக் குறிப்பிடுக.
ஆ) இப் பாடலின் ஆசிரியர் யார்?

ix. "கான் ஆள உனை விடுத்த கண் இலா அருளிலி..."

அ) இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
ஆ) 'கண் இலா அருளிலி' எனக் கூறப்பட்டவர் யார்?

x. " பார்ப்பனர் மொழிபெயர்த்தேயத்தார், யவனர், புலம் பெயர் மக்கள் தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்து வந்தார்கள்...."

அ)'மொழிபெயர்த்தேயத்தார்' என்ற தொடர் யாரைக் குறிக்கின்றது?
ஆ) இத் தொடரில் வெளிப்படும் தமிழ் மக்களுடைய மனப் பான்மை யாது?

2) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரை நடைப் பகுதிகளையும் வாசித்து, அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i. உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம் போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண்டது மாளிகை

அ) இங்கு முதுமொழி வலியுறுத்தும் உண்மை யாது?
ஆ) அதை வலியுறுத்துவதற்குக் கவிஞர் கூறும் எடுத்துக் காட்டுக்கள் எவை?

ii. ஓடுகின்ற நீரையெதிர்த் தோடுகின்ற மீன்கள்
ஊருகின்ற சிற்றெறும்பின் ஒழுங்கு முறை வாழ்க்கை
ஆடுகின்ற பூ மரங்கள் அசைகின்ற இலைகள்
அதிகாலை எழுந்து இரைதேட வரும் பறவை
மூடுகின்ற இமைக்கடங்கா முழு நிலவு விழிகள்
முந்தானைச் சேலை கட்டும் செந்தாழம் பூக்கள்
கூடுகின்ற இயற்கையெழில் குதூகலத்தைத் தருமே
குழந்தையென எனது மனம் குதித்தாடும் தினமே

அ) இங்கு கூறப்பட்டுள்ள உயிரினங்களையும், அவற்றின் செயற்பாடுகளையும் தருக.
ஆ)இப்பாடலில் இயற்கை அழகு எடுத்துக் காட்டப்பட்டிருப்பதைத் தெளிவுபடுத்துக.

iii. வயிரம் எனும் சுடு நெருப்பை மிக மூட்டி
வளர்க்கின் உயர் வரைக்காடு என்ன
செயிர் அமரில் வெகுளி பொர சேர இரு
திறத்தேமும் சென்று மாள்வோம்
கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்
குருநாட்டில் கலந்து வாழ
உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள் என்றான்
அறத்தின் உருவம் போல்வான்.

அ)இங்கு எடுத்துக் காட்டப்படும் அத்தினாபுரியின் சிறப்புக்களைத் தருக.
ஆ) இங்கு போரின் விளைவுகளாகக் கூறப்பட்டவை யாவை?

iv. " என் அருமைச் செல்வங்களே... புறப்பட வேண்டியது தான் பறம்பு மலையின் இனிய சுனை நீரில் ஒரு முடக்கு குடியுங்கள். கடைசியாக முடிந்த மட்டுக்கும் இந்த மலைப்பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக் கொள்ளுங்கள். கடந்து செல்கையில் காற்று வீசும். ஆனால் இந்த மலைப்பூக்களின் மணம்... பறவைகளின் ஒலி ஓயாது. பாரி இருந்தால் பேச்சுக் கொடுப்பார். புறப்படுகிறோம் பறம்பே... மதுவிலும், புலாலிலும் களித்திருந்த நட்பு நம் முடையது."

அ) கபிலருக்கு பாரியிடம் இருந்த ஈடுபாடு எவ்வாறு புலப்படுகிறது?
ஆ) இக்கூற்று யாருக்கு, எவ்வாறான மனநிலையில் கூறப்பட்டது?

v. தூலவடிவில் நின்றும் மறைத்த இலட்சிய புருடர்களை இயற்கைப் புலமையும் அறிவுத் தெளிவும் உள்ள உண்மைக் கவிஞர்கள் காவியங்களிலே சூக்கும வடிவில் அமைத்துக் காட்டுகின்றார்கள். இவ் அற்புதக் காட்சியில் இலக்கிய புருடர்களைக் காணாமற் கண்டு பேரானந்தம் அடைகின்றோம். இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம். இதே போன்று இலக்கியங்களும் அபின்னம்.

அ)தூலவடிவம், சூக்கும வடிவம் இரண்டிற்கும் விளக்கம் தருக.
ஆ) "இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம்" என்பதால் நீர் புரிந்து கொள்வதுயாது?

3) தத்தை விடு தூது என்ற இலக்கியத்தில்

அ) காதலி மீது தலைவனின் காதல் உணர்வு
ஆ) பெண்களின் அன்றைய சமுதாய நிலை
ஆகியன புலப்படுமாற்றை விளக்குக.

அல்லது

மூத்தம்மா என்ற சிறுகதையில்
அ) மூத்தம்மாவின் குணப்பண்புகள்
ஆ) சிறுகதை ஆசிரியரின் மொழிநடை
என்பவற்றை எடுத்துக் காட்டி விளக்குக.

4) குகப்படலம் என்ற பகுதியில்
அ) கம்பர் காட்டும் கைகேயியின் குணப்பண்புகள்
ஆ) கையாளப்பட்டுள்ள அணிச்சிறப்புக்கள் ஆகியவற்றைத் தெளிவுபடுத்துக.

அல்லது

திருக்குற்றாலக் குறவஞ்சியில்
அ) குற்றால நாட்டின் வளம்
ஆ) குற்றால நாதரின் சிறப்பு
என்பன எடுத்துக் காட்டப்பட்டிருப்பதை ஆராய்க.

5) 'சீறிஓடாத வருங்கால மனிதநதி' என்ற கவிதையில்
அ) எழுத்தறிவின்மையின் அவலம்
ஆ)எழுத்தறிவில்லாத இளைஞன் மீது வருத்தப்படும் கவிஞரின் மனநிலை என்பன புலப்படுமாற்றை விளக்குக.

6) சங்கப் பாடல்களில்
அ) குறுந்தொகையில் தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலை
ஆ) புறநானூறு கூறும் முதுமையின் இரக்கம் என்பன விவரிக்கப்படுமாற்றினை விளக்குக.

7) நாட்டார் பாடல்கள் என்ற பகுதியில்
அ) அரிவி வெட்டுப் பாடலில் இளந்தாரிமாருக்குக் கூறப்படும் உவமைகள்
ஆ) அரிவாள் செய்யும் முறை என்பன எடுத்துக் காட்டப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 175





பழுவேட்டையர்களிடம் அகப்பட்டுக் கொள்வதை காட்டிலும் இந்த இளையராணியிடம் அகப்பட்டு கொள்வதில் அபாயம் அதிகம் இருக்கிறது. அவர்கள் முன்னிலையில் தன் அறிவு நன்றாய் இயங்குகிறது. தோள் வலி ஓங்குகிறது. அரையில் உள்ள கத்தியில் எப்போதும் கை இருக்கிறது. யுக்தியினாலும் ஒரு கை பார்க்கலாம் கத்தியினாலும் ஒரு கை பார்க்கலாம்.

ஆனால் இந்த மோகினியின் முன்னால் புத்தி மயங்கி விடுகிறது கையும் கத்தி பிடிக்கும் சக்தியை இழந்து விடுகிறது. மீண்டும் இவள் முன்னால் சென்றால், என்ன நேருமோ என்னவோ? போதும் போதாதற்கு மந்திரவாதி ஒருவனுடைய கூட்டுறவும் இவள் வைத்துக் கொண்டிருக்கிறாள்! இரண்டு பேரும் சேர்ந்து என்ன மாயமந்திரம் செய்வார்களோ? குந்தவைப் பிராட்டியிடந்தான் இவளுக்கு எவ்வளவு துவேஷம்? அந்தத் துவேஷம் இவளுடைய கண்களில் தீப்பொறியாக வெளிப்படுகிறதே! ஒரு வேளை மனத்தை மாற்றிக் கொண்டு பழுவேட்டரையரிடம் தன்னைப் பிடித்துக் கொடுத்தாலும் கொடுத்து விடலாம்! பெண்களின் சபல சித்தமும் சஞ்சல புத்தியும் பிரசித்தமானவை அல்லவா? ஆகையால் மீண்டும் இவளைச் சந்திக்காமல் தப்பித்துக் கொண்டு போய்விட்டால் நல்லது.

ஆனால் எப்படி? தோட்டத்துக்குள் புகுந்துதான் வழி கண்டுபிடித்துப் போக வேண்டும்! மதில் ஏறிக் குதிக்க வேண்டும்! மதிலுக்கு வெளியில் தன்னைத் தேடி வந்தவர்கள் காத்திருந்தால்?. வேறு ஏதேனும் உபாயம் இல்லையா? வந்தியத்தேவா! இத்தனை நாளும் உனக்கு உதவி செய்து வந்த அதிர்ஷ்டம் எங்கே போயிற்று? யோசி! யோசி! மூளையைச் செலுத்தி யோசி! கண்களையும் கொஞ்சம் உபயோகப்படுத்து! நாலாபக்கமும் பார்! இதோ இந்த இருள் அடைந்த மாளிகை இருக்கிறதே! இது ஏன் இருளடைந்திருக்கிறது? இதற்குள்ளே என்ன இருக்கும்? இதன் உள்ளே புகுந்தால் இதன் இன்னொரு வாசல் எங்கே கொண்டு போய் விடும்? எல்லாவற்றுக்கும் இதற்குள் புகுந்து பார்த்து வைக்கலாமா? இப்போது உபயோகப்படாவிட்டாலும் வேறு ஒரு சமயத்துக்கு உபயோகப்படலாம். யார் கண்டது?

ஆனால், இதற்குள்ளே எப்படிப் பிரவேசிப்பது? எவ்வளவு பெரிய, பிரம்மாண்டமான கதவு! இதற்கு எவ்வளவு பெரிய பூட்டு! அப்பப்பா! என்ன அழுத்தம்! என்ன கெட்டி! ஆ! இது என்ன? கதவுக்குள் ஒரு சிறிய கதவு போலிருக்கிறதே! கையை வைத்ததும் இந்தச் சிறிய கதவு திறந்து கொள்கிறதே! அதிர்ஷ்டம் என்றால், இது வல்லவா அதிர்ஷ்டம்! உள்ளே புகுந்து பார்க்க வேண்டியதுதான்!

பெரிய கதவுக்குள்ளே, பார்த்தால் தெரியாதபடி பொருத்தியிருந்த சிறிய கதவைத் திறந்து கொண்டு வந்தியத்தேவன் அந்த இருளடைந்த மாளிகைக்குள் புகுந்தான். உள்ளே காலடி வைத்ததும் அவனுக்குத் தோன்றிய முதலாவது எண்ணம், தான் அம்மாளிகைக்குள் புகுந்தது நந்தினிக்குக் கூடத் தெரிய கூடாது என்பது தான். ஆகையால் சிறிய கதவைச் சாத்தினான். சாத்தியவுடன் உள்ளிருந்த இருள் இன்னும் பன்மடங்கு கனத்து விட்டதாகத் தோன்றியது. கதவு திறந்திருந்த ஒரு வினாடி நேரத்தில் சில பெரிய தூண்கள் நிற்பது தெரிந்தது.

இப்போது அதுவும் தெரியவில்லை. இருட்டு என்றால், இப்படிப்பட்ட இருட்டைக் கற்பனை செய்யவும் முடியாது!.. சீச்சீ! வெளிச்சத்திலிருந்து இருட்டில் வந்திருப்பதால் முதலில் இப்படித் தான் இருக்கும் சற்று போனால் இருட்டின் கனம் குறைந்து பொருள்கள் மங்கலாகக் கண்ணுக்குப் புலப்படும் இதை எத்தனையோ தடவை அனுபவத்தில் கண்டிருந்தும், இருளைக் கண்டு கலக்கம் ஏன்? சும்மா நிற்பதற்குப் பதில் கொஞ்சம் நடந்து பார்க்கலாம். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

ஒரு நீண்ட நெடு கடல், பார்பதற்கே நம்ம மெரினா மாதிரி நீளமா அந்த கடல் இருக்கு. அழகான தெளிந்த கடல் அலை, அந்த கடற்கரை அருகில் ஒரு மீனவன் இருந்தான். அவன் பெயர் கைசன். அவனுக்கு லோனா என்ற பாட்டி இருந்தார். அவன் தினமும் கடலுக்கு சென்று மீன் பிடித்து கொண்டு ராஜாவிற்கு கொடுத்து வந்தான் அதற்கு அவனுக்கு சன்மானமும் கிடைத்தது.

பிறகு கடலுக்கு வந்து நன்றி சொல்வான். அவனுக்கு அவன் பாட்டி கற்று கொடுத்தது. அவன் இந்த கடல் மிக அமைதியாக, அழகாக இருக்கிறது, இதை பார்த்து ரசித்துக்கொண்டே சந்தோசமாக இருக்கலாம் என மனதுக்குள் பேசினான்.

காலையில் மீன்பிடிக்க கிளம்பினான்.



பாட்டி லோனா தினமும் எடுத்து செல்லும் பிரட்டை மறக்காதே, அது நாம் கடலுக்கு அளிக்கும் உணவு என்றார். கைசன் சரி பாட்டி இனிமேல் மறக்கமாட்டேன் என அதை வாங்கிக்கொண்டான். கடலுக்குள் சென்றதும் பிரட்டை கடலுக்கு வீசினான். பிறகு அவன் வலையை எடுத்து கடலில் வீசினான். சிறிது நேரத்தில் மீன்கள் வலையில் சிக்கின எடுத்து கொண்டு வீட்டை அடைந்தான். பாட்டி லோனாவிற்கு உடல் நிலை சற்று சரியில்லை. பாட்டி ஓய்வெடுங்கள், நான் அரசரை பார்த்து விட்டு வந்துவிடுகிறேன் என்றான். பாட்டியை கவனித்து கொள்ள அவனை தவிர வேறு யாரும் கிடையாது. அவனும் அரசரை பார்த்து விட்டு வேகமாக வீடு திரும்பினான். லோனாவிடம் சென்று, பாட்டி உங்கள் உடல் நிலையில் முன்னேற்றம் இருக்கிறதா என்று உங்களுக்கு ஏதாவது சமைத்து வருகிறேன் என்று சமையலறை சென்றான். உள்ளே சென்றவனுக்கு அதிர்ச்சி, பெண் ஒருவர் நின்று சமைத்து கொண்டு இருந்தார்.

அவன் அதிர்ச்சி மீளாமல் அருகில் சென்றான். அவள் கொள்ளை அழகி, நீண்ட அழகிய கூந்தல், தலையில் கடற்பாசிகள் பூக்கள் நிறைந்த கிரீடம் அணிந்திருந்தாள். ஒரு இளவரசியை போன்று அழகாக இருந்தாள். அவன் பயந்து போய் "பாட்டி, உள்ளே ஏதோ பெண் ஒருவர் இருக்கிறார்" என்றான். லோனா, அதுவா அலெனா அவள் பெயர், நீ போன பிறகு அவள்தான் என்னை பார்த்து கொள்கிறாள் என்றார். அலெனா பாட்டிக்கு தேவையான உணவுகளை எடுத்துக் கொண்டு வந்தாள். அவன் அவளை பார்த்து புன்னகைத்தான். அவளிடம் "நீங்கள் யார்?" என்று வினவினான்.

அலெனா நான் இந்த கடலில் வாழ்கிறேன், நான் ஒரு கடல் கன்னி என்றாள். கைசன் நீங்கள் ஏன் எங்களுக்கு உதவ வேண்டும்? என்றான். அலெனா நீ தினமும் என்னை கவனித்து கொள்கிறாய், உணவளிக்கிறாய், ஆகையால் நான் உனக்கு உதவ வந்தேன் என்று சிரித்தாள். இருவரும் அவர்களது அன்றாட வேலைகளை பார்த்து கொள்ள ஆரம்பித்தனர்.

ஒருவர் ஒருவரை புரிந்து கொள்ளவும் செய்தனர். அலெனா, கைசன் இருவருக்கும் இடையே ஒரு வித அன்பு உருவானது. அப்போது தான் அந்த சோகமான நிகழ்வு நடந்தது. அரசர் இறந்து விட்டார். அவர் பண்பானவர். அவருக்கு பின் இளவரசர் முடி சூட்டிக் கொண்டார். அவர் மக்களிடையே கொடூரமாக நடந்து கொண்டார். அரசவை கூடியது. அரசர் இந்த ஸ்க்ரீன்கள் தங்கத்தால் செய்ய வேண்டும் அதுவும் 2 நாட்களில் வேலை முடிய வேண்டும் என்றார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் எதை உறுதியாக நினைக்கிறானோ அதுவாகவே அவன் மாறிவிடுவான்.
- புனித பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழருக்குத் தொல்லை தரும் தொல்லியல் திணைக்களம்

தமிழர் தாயகத்தில் தொல்லியல் திணைக்களம் வரலாற்றுச் சிறப்புமிக்க 37 இடங்களை ஆக்கிரமிப்புச் செய்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இதனை அவர் ஆதாரபூர்வமாகவும் நிரூபித்துள்ளார்.

பௌத்த அடையாளத்தை மட்டும் தனது இலட்சனையாகத் தொல்லியல் திணைக்களம் கொண்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்; நம் தமிழர் தேசத்தில் எங்கெல்லாம் தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதென்பதையும் துலாம்பரப்படுத்தியுள்ளார்.

வரலாற்றுச் சின்னங்களை - வரலாற்று அடையாளங்களைப் பாதுகாத்தல் என்ற பேரில், பௌத்த அடையாளங்களைப் பாதுகாப்பதும் தமிழர்களின் வரலாற்று அடையாளங்களை மறைத்து அவற்றைப் பௌத்த அடையாளமாக வெளிப்படுத்துவதும் தொல்லியல் திணைக்களத்தின் கடமையாக இருக்கிறது.

உண்மையில் ஒரு நாட்டின் வரலாற்றுச் சின்னங்கள், தொல்லியல் சான்றுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

ஆனால் அதனை இனம் மதம் சார்ந்து மேற்கொள்வதாயின், அது தொல்லியல் சான்றுகளை அழிக்கின்ற நடவடிக்கையாக அமையுமேயன்றி வேறில்லை.

உலகம் முழுவதிலும் தொன்மங்கள் பாதுகாக்கப்படுகின்ற அதேநேரம் அவற்றின்; மூலம், நோக்கம், அது பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் சமூகம் என்பவற்றில் இம்மியும் தாக்கம் ஏற்படாத வகையில் அந்த வரலாற்றுச் சான்றுகள் பேணப்படுகின்றன.

ஆனால் இலங்கையில் இதுமுற்றிலும் விசித்திரமாக உள்ளது. உதாரணத்துக்கு, இந்த நாட்டை ஆண்ட இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் மிகச்சிறந்த சிவபக்தன். அவன் தன் தாயின் அந்திமக்கிரியைகளின் பொருட்டு கன்னியா வெந்நீரூற்று கிணறுகளை அமைத்தான் என்பது வரலாறு.

எனினும் கன்னியா வெந்நீரூற்றுக் கிணறு அமைந்த இடத்தில் பௌத்த அடையாளங்களை நிறுவுவதில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனும்போது,

தொல்லியல் திணைக்களம் இந்த நாட்டு மக்களுக்கான அரச திணைக்களமா? அல்லது பௌத்த சிங்களவர்களுக்குரிய அரச அமைப்பா என்ற கேள்வி எழுகிறது.

இது தவிர, இந்த நாட்டின் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதையும் அவர்களின் ஆதிச்சமயம் சைவம் என்பதையும் இல்லாதொழித்து, இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதை நிரூபிப்பதும் தொல்லியல் திணைக்களத்தின் நோக்கம் என்று கூறுவதை எவரும் நிராகரிக்க முடியாது.

எதுவாயினும் தொல்லியல் திணைக்களத்தின் கடந்தனத்தை பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தோல் உரித்துக் காட்டியுள்ளார்.

அவர் வெளியிட்ட ஆவண அறிக்கை வெளிநாட்டுத் தூதுவர்களுக்குச் சென்றடைவதும் அதனை சமூக வலைத்தளங்கள் ஊடு சர்வதேச ரீதியில் அறிய வைப்பதும் நம் தமிழ்ச் சமூகத்தின் கடமையாகும்.

## கூரிய ஆயுதத்தால் தாக்குதலுக்கு முயற்சி

### சுன்னாகத்தை சேர்ந்தவர் புளியம் பொக்கணையில் கைது

(யாழ்ப்பாணம்)

கூரிய ஆயுதத்தால் தாக்குதலுக்கு முயற்சி செய்யப்பட்ட நிலையில் சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவர் புளியம் பொக்கணையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் இருந்து 9ம் திகதி அதிகாலை கூரிய ஆயுதங்களுடன் மூவர் புளியம்பொக்கணை களவெட்டிதிடல் பகுதியில் வசிக்கும் ஒருவரை தாக்குவதற்காக சென்றுள்ளனர்.

அவர்கள் அப்பகுதி இளைஞர்களால் பிடிக்கப்பட்ட நிலையில் அதில் இருவர் தப்பிச் சென்றுள்ளனர். மக்களால் பிடிக்கப்பட்டவர் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து வாள் ஒன்றும், இரும்பு கம்பிமற்றும் அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றும் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர். அவர்கள் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபரை இன்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கைதான சந்தேக நபருக்கு யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்பான வழக்குகள் உள்ளதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ம-7,9,316)

## சிவப்பு சீனி இறக்குமதி 160 மில்லியன் அபராதம்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் 607.5 மெற்றிக் தொன் சிவப்புச் சீனியை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் குற்றம் சாட்டப்பட்ட நிறுவனம் அதற்கான அபராதத் தொகையை திறைசேரிக்கு செலுத்தியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

குறித்த அபராதத் தொகையான 160 மில்லியன் ரூபாவை திட்டமிட்டபடி நிறுவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 9ஆம், திகதி தடைசெய்யப்பட்ட சிவப்புச் சீனியை வெள்ளைச் சீனி என்று கூறி இறக்குமதி செய்த போது சுங்க அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## திறப்புக் கோர்வை கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முட்டாசு கடைச் சந்திப் பகுதியில் திறப்புக் கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் வலம்புரி அலுவலக நேரத்தில் தகுந்த ஆதாரத்தினைக் காட்டிப் பெற்றுக்கொள்ள முடியும். (ம-7,9)

## பாடசாலைக் கட்டடத்தின் முதல் மாடியிலிருந்து குதித்த 15 மாணவி

(கண்டி)

கண்டி பெண்கள் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 15 வயது சிறுமி ஒருவர் பாடசாலை கட்டடத்தின் முதல் மாடியில் இருந்து குதித்துள்ளார்.

இதில் காயமடைந்த மாணவி கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த மாணவி கடந்த திங்கட்கிழமை 11.30 மணியளவில் பாடசாலையில் அமைந்துள்ள கட்டடமொன்றில் சுமார் 15 அடி உயரத்தில் இருந்து தரையில் குதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மாணவிக்கு ஞாபக மறதி நோய் இருப்பதாக மாணவியின் பெற்றோர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

## இத்தாலி செல்ல முயன்ற இருவர் கட்டுநாயக்காவில் கைது

### யாழைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடக்கம்

(கொழும்பு)

வெளிநாடு செல்ல முயன்ற இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலி இத்தாலிய விசா மூலம் ஆட்கடத்தலில் ஈடுபட முயன்ற இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரை விமான நிலையத்தில் வைத்து அதிகாரிகள் விசாரணை நடத்தியதில் இந்த கடத்தல் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன. இத்தாலி விசாவிற்காக 25 இலட்சத்து 17 ஆயிரம் ரூபா பணத்தை கடத்தல்காரர்கள் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மற்றும் வென்னப்புவ பிரதேசத்தை சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியதையடுத்து. 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,9)

## உள்நாட்டு வருவாய் சட்டமூலம் சபாநாயகரால் அங்கீகரிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 79 ஆவது சரத்திற்கு அமைய உள்நாட்டு இறைவரி (திருத்த) சட்டமூலத்தின் சான்றிதழை அங்கீகரித்துள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இந்த சட்டமூலம் கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, சபாநாயகரின் சான்றிதழைப் பெற்று, உள்நாட்டு வருவாய் (திருத்தம்) சட்டமூலம் உள்நாட்டு வருவாய் (திருத்தம்) சட்ட எண். 04 இன் 2023 அமுல்படுத்தப்பட்டுள்ளது. (ம-7,9)

## தேசிய பாதுகாப்பு மாநாடு ஜனாதிபதி தலைமையில் எதிர்வரும் வாரம்

தேசிய பாதுகாப்பு மாநாடு 2023 மே 17 ஆம் திகதி சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய பாதுகாப்பு குறித்த முதன்மையான சிந்தனைக் குழுவான இலங்கையின் தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனம் (INSS) மூன்றாவது முறையாக இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த மாநாட்டில் இராணுவ அதிகாரிகள், சட்ட அமுலாக்க அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், சிந்தனையாளர்கள் மற்றும் சிரேஷ்ட வல்லுனர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மூன்று கருப்பொருள் துறைகளில் தங்கள் முன்னோக்குகளை பகிர்ந்து கொள்வார்கள் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7,9)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை **வவுனியா பிரதேசத்தில்** மறக்காரம் பளை-கணேசபுரம், சமயபுரம், ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை-காத்தான் குளம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.


# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- I


08

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.






இத் தூண்டில்களில் கீளி, சூடை, சிறிய கணவாய் போன்றன இரையாக இடப்படுகின்றது. இது அதிகாலை வேளை கடலில் 2-6 மணித்தியாலம் வரை விடப்பட்டு அதன் பின்னர் வெளியே எடுக்கப் படும். இதில் கல்மீன் வகைகள், பாரை, கொடுவாய், கலவாய், சூரல், கெழுறு போன்ற மீன்கள் பிடிபடுகின்றன, மட்டக்களப்பு, நீர்கொழும்பு, தங்காலை பகுதிகளிலும் 30 பாகம் ஆழமான பகுதிகளிலும் இத் தூண்டில் பயன்படுத்தப்படுகின்றது.



படுப்பு நீள் தூண்டில் (Bottom Long Line)


### மிதப்பு நீள் தூண்டில்

கெளரவன் மிதப்புத் தூண்டில் 100 பாக ஆழமான பகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு தொகுதி 5 தூண்டில்களைக் கொண்டதாக பல தொகுதித் தூண்டில்கள் பயன்படுத்தப்படுகின்றன. சூரை, வாளை, கும்பிளா,போன்ற மீன்கள் இரையாகப் பயன்படுத்தப் படுகின்றன. அதிக மூலதனத்தைக் கொண்ட இத் தூண்டிலில் கெளரவன், சுறா, தலப்பத்து, பெரிய திருக்கைகள் போன்றன அகப்படுகின்றன. தெற்கு, தென்மேற்கு கரையோரங்களில் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது.
(படம் -15)





### விழுது தூண்டில்கள்

விழுது தூண்டிலின் பிரதான நூலான கயிறு அல்லது கம்பி அல்லது நைலோனால் ஆனது. பிரதான கயிற்றின் ஒரு நுனியில் மிதவையும் மறுநுனியில் பாரமும் பொருத்தப்பட்டிருக்கும். தூண்டில் பொருத்தப்பட்ட சிறிய கயிறுகளின் மறுநுனிகள் குறிப்பிட்ட இடைவெளியில் பிரதான கயிற்றில் பொருத்தப் படும். தேவையான அளவு எண்ணிக்கையில் தூண்டில்கள் பொருத்தப்படும். இவ் விழுது தூண்டில் பாரம் மற்றும் மிதவையின் உதவியுடன் நீரில் நிலைக்குத்தாக நிறுத்தப்பட்டு மீன்கள் பிடிக்கப்படுகின்றன.
(படம்-16)



விழுது தூண்டில்கள் (drop lines) படம்-16







### டைனமைற் இட்டுமீன் பிடித்தல்

பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய மீன்பிடி முறையான டைனமைற்று இட்டு மீன் பிடித்தல் போன்றவற்றை பாரம்பரிய மீனவர்கள் அன்றி குறுங்கால இலக்[illegible] மீனவர்களே ப[illegible]. பொதுவாக இவர்கள் அதிக பொருளாதார அரசியல் பின்புலத்தைக் கொண்டவர்களாகவே உள்ளனர். இவ்வாறான முறைகளில் மீன் குஞ்சுகள், இலக்காகக் கொள்ளப்படாத மீனினங்கள், மீன்களின் இனவிருத்தி இடங்கள், முட்டைகள் ஆகியனவும் அழிவடைகின்றன. மேலும், இலக்காகக் கொள்ளப்படும் மீனினங்களில் பெரும் பகுதி பயன்படுத்தப்பட முடியாத நிலையை அடைகிறது. இதனால் சூழலும் மாசடையும். டைனமைற்று இட்டுமீன் பிடித்தல் சட்டப்படி குற்றமாகும்.

டைனமைற் பயன்படுத்தும் போது, கடலடியில் ஏற்படும் வெடிப்பின் அதிர்வுகளினால் மீன்கள் காயமடைகின்றன. அவற்றின் கண்களிலும் தொண்டைப் பூவிலும் இரத்தக் கசிவு இருந்தால் அப்படியான மீன்களை வாடிக்கையாளர்க[illegible] நல்ல தல்ல. அத்து[illegible]யான மீன்களை விற்பதும் வைத்திருப்பதும் சட்டவிரோதமானது. டைனமைற் வைத்து பிடிக்கப்பட்ட மீன்களை வியாபாரம் செய்வது முற்றும் முழுவதுமாக தடை செய்யப்பட்டுள்ளது.

இதேநேரத்தில் கொழும்பு மீன் சந்தை, நீர்கொழும்பு மீன் சந்தை உட்பட பிரதான மீன் சந்தைகளில் டைனமைற் பயன்படுத்தி மீன்பிடிக்கப்பட்டு விற்பனைக்கு வருவதனை கண்காணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### நஞ்சு இடப்பட்டு மீன் பிடித்தல்

மரபு ரீதியான மீனவர்களினால் உண்ணாட்டு நீர் நிலைகளில் நஞ்சு இடப்பட்டு மீன் பிடிக்கப்படும். “வேலம் தேக்கில்” இலை போன்ற நச்சுத் தன்மையான பதார்த்தங்களும் இங்கு இடப்படும். 1996 ஆம் ஆண்டின் இல 2 மீன்பிடி நீருயிரின வள திருத்த சட்டத்திற்கமைய இதுதடை செய்யப்பட்டுள்ளது.

### கட்டுமரங்கள் முதல் நவீன மீன்பிடிக்கலன்கள் வரை....

மனிதன் ஆதியில் பிரயாணத்தின் நிமித்தம் கடலில் செல்லக் கூடிய சிறிய கலங்களை உபயோகித்தான். அவைகள் பின்பு அவனுக்கு வேண்டிய கடல் உணவுகளையும் ஏனைய கடல் வளங்களையும் பெறக் கூடிய சாதனங்களையும் விளங்கின. இவ்வாறு மனிதன் மரங்களைக் கொண்டு கட்டுவித்து மிதக்கவிட்டு கட்டுமரங்களை உருவாக்கினான். அதேபோல் முழுமரம் ஒன்றையே குடைந்து ஒரு மிதக்கும் கலமாக ஆக்கிக் கொண்டான். இவ்வகைக் கலங்களே தோணிகள் என அழைக்கப்பட்டன. காலப்போக்கில் இச் சிறிய தோணிகள் வளர்ச்சிடைந்து வள்ளங்கள் என்னும் பெயரில் அழைக்கப்படுகின்றன. இவ் வள்ளங்கள், கட்டுமரங்கள் பொதுவாக ஒரு சிறிய ஆற்று இடைவெளியைக் கடக்கும் போக்குவரத்துச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டன. இவைகளுக்கு சுக்கான்கள் பொருத்தப்பட்டு துடுப்புக்கள் பயன்படுத்திச் செலுத்தப்பட்டன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சார...

கான விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

முன்னோடி திட்டத்தின் கீழ், முதற் கட்டமாக 300 பெற்றோலில் இயங்கும் முச்சக்கரவண்டிகளை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## யாழ்.பல்கலைக்...

முற்றத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. (ம-7,9)

## டொலரின்...

முதல் பெறுமதி 310 ரூபாய் 90 சதமாக பதிவாகியுள்ளது. அமெரிக்க டொலரின் விற்பனை பெறுமதி 324 ரூபாய் 80 சதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 391 ரூபாய் 51 சதம் என்றும், விற்பனை பெறுமதி 411 ரூபாய் 56 சதம் என்றும் கூறப்பட்டுள்ளது.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 340 ரூபாய் 08 சதமாகவும், விற்பனை பெறுமதி 358 ரூபாய் 09 சதமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## 10 நிமிடங்...

பக்ஷவிற்கும் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனிலுக்கும் இடையில் இந்த விடயம் தொடர்பில் கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றதை அடுத்து பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

பாராளுமன்றத்தை தற்காலிகமாக ஒத்திவைத்த சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, அவசர கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கும் அழைப்பு விடுத்தார்.

எக்ஸ்-பிரஸ் பேர்ல் கப்பல் அனர்த்தம் தொடர்பில் விவாதம் நடத்துவதா? இல்லையா? என்பது குறித்து கட்சித் தலைவர்கள் முடிவு செய்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-7,9)

## இலங்கையில்...

2022இல் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது.

தொடர்ச்சியான வறட்சி, வெளிநாட்டு கையிருப்பு, அரசியல் நெருக்கடி, உயர் பணவீக்கம் மற்றும் பொதுக் கடன் போன்ற பல காரணிகள் நாட்டின் பொருளாதாரத்தில் பேரழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

2019 ஆம் ஆண்டில் உணவுப் பாதுகாப்பின்மை 10 சதவீதமாக இருந்த ஒரு நாட்டிற்கு இது தலைகீழ் மாற்றத்தைக் குறிக்கிறது என்றும் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. (ம-7,9)

## டெங்கு...

இதனை அறியப்படுத்தியுள்ளார்.

இதன்படி டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் தேவைக்கு ஏற்ப பிரதம செயலாளர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு பொலிஸார் மற்றும் முப்படையினருக்கும் ஜனாதிபதியின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த வாரத்தில் நாடளாவிய ரீதியில் 1896 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், மேல் மாகாணத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இது 49 சதவீதமாகும் எனவும் தெரியவந்துள்ளது.

தற்போது டெங்கு வைரஸின் 2 ஆம் மற்றும் 3ஆம் திரிபுகள் அதிகளவில் பதிவாகியுள்ளன என்றும் 14 வருடங்களின் பின்னர் டெங்கு வைரஸின் 3 ஆவது திரிபு பரவுகிறது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளதோடு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளதால், டெங்கு நோய் பரவும் வாய்ப்பும் அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-7,9)

## மூடிய அறைக்...

பட்ட போதிலும் முக்கியமாக ஜனாதிபதித் தேர்தல் பற்றித்தான் அதிகம் பேசப்பட்டது எனத் தெரியவருகின்றது.

அதில் பல யோசனைகளை பசில் முன்வைத்தார் எனவும் அறியமுடிகின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலையே மொட்டுக் கட்சியின் வேட்பாளராக நிறுத்துதல், ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சுப் பதவி வழங்குதல் உள்ளிட்ட பல யோசனைகளை ரணிலிடம் பசில் முன்வைத்தார் எனவும் தெரியவருகின்றது. (ம-7,9)

# அந்நிய நேரடி முதலீட்டை ஈர்க்க ஜனாதிபதி திட்டம்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான விசேட பொதியை விரைவில் அறிவிக்கவுள்ளதாக ஜனாதிபதி அமைச்சர்கள் குழுவிற்கு அறிவித்ததாக வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதலீட்டாளர்கள் அச்சமின்றி இலங்கையில் முதலீடு செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால்தான் முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருவார்கள் என தெரிவித்த அமைச்சர், கடந்த வருடம் இந்த நேரத்தில் ஏற்பட்ட வன்முறை சர்வதேச ரீதியில் நாட்டிற்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தியதை நினைவு கூர்ந்தார்.

ஒரு நாட்டிற்கு முதலீட்டாளர்கள் வருவதற்கு, அந்த நாட்டில் அச்சம் மற்றும் சந்தேகம் இன்றி வாழவும், சட்டத்தின் ஆட்சி முறையாகச் செயற்படவும், முதலீட்டாளர்களின் முதலீடுகளுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு, அனுசரணை, நிதி நன்மைகள் மற்றும் ஊக்கத்தொகைகளை வழங்க இயலாமையால் முதலீடுகள் குறைந்த மட்டத்தில் இருப்பதாகவும் அவர் வலியுறுத்தினார். (ம-7,9)

## ஜனா...

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்படும்.

அதேபோன்று 12ஆம்திகதி அதிகாரப்பகிர்வு தொடர்பில் கலந்துரையாடப்படும். (ம-7,9)

## விரை...

அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், 'பணவீக்கம் நாம் எதிர்பார்த்ததை விடவும் மிகவேகமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. அதனுடன் இணைந்ததாக உயர்மட்டத்தில் காணப்பட்ட வட்டிவீதங்கள் தற்போது வீழ்ச்சியடைந்து வருகின்றன' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி கடன்மறுசீரமைப்புச்செயன்முறை தொடர்பில் முழுமையாக அறிவித்ததன் பின்னர் சந்தை வட்டி வீதங்கள் மேலும் விரைவாக வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7,9)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 10/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1565
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 6 8 2 2 1 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.05.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1140
M 10 21 44 75
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.05.10
சீட்டிழுப்பு இலக்கம் 3352
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
R 37 40 54 60
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 10/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1458
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
O 23 01 10 14 44

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.05.10
சீட்டிழுப்பு இலக்கம் 419
வெற்றி இலக்கங்கள்
கன்னி 03 04 11 29 கன்னி
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/05/10
சீட்டிழுப்பு இலக்கம் 5110
P 6 6 0 8 7 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2084 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.05.10 தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
Z 03 08 27 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,615,900/-
DLB

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி 2023.05.10
வெற்றி வாரம் 4245
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 44,336,195.70
வெற்றி இலக்கங்கள்
03 12 14 41 A
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,953,735.80
திகதி 2023-05-10
வெற்றி வாரம் 3796
வெற்றி இலக்கங்கள்
10 11 37 46
வர்ணம் பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,040,820/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 27 04 16 27 33
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1260
2023.05.10 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 328,703,631.80
DLB

ஜயோதா Jayoda
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி 2023.05.10
வெற்றி வாரம் 1920
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 42,761,832.40
வெற்றி இலக்கங்கள்
23 30 54 69 F
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் 1910
சீட்டிழுப்பு திகதி 2023.05.10
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 84,222,498.20
வெற்றி இலக்கங்கள்
26 30 36 67 I
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15497)

076 825 7716 (ஆகாஸ்)

# முல்லை. உடையார்கட்டில் பெண்ணின் பணப்பை அபகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட உடையார் கட்டு நகர் பகுதியில் வீதியால் நடந்து சென்ற பெண்ணின் பணப்பையினை உந்துருளியில் வந்த கொள்ளையர்கள் கொள்ளையடித்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அங்குள்ள ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணத்தினை எடுத்துக்கொண்டு சென்றபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பணத்தை பறிகொடுத்த குரவில் பகுதியினை சேர்ந்த குறித்த பெண் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

சம்பவத்தில் தன்னிடம் இருந்த பணம் உட்பட 2 இலட்சத்து 80,000 ரூபாய் வரையான பணத்தினை கைப்பையில் கொண்டு சென்றவேளை இந்த கொள்ளை சம்பவம் இடம் பெற்றுள்ளது.

(ம-7,9)

VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-6525)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். | V2 TRAVELS

0777-068-777

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் | V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-6525)


வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

VILLAGE HOTEL
யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்
077 544 8503

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/-)
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம்
  காலை 6 முதல் மாலை 6 வரை



முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.

076 911 9371
076 165 3129
(15473)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 076 559 3322 (14083)

புதிய பிளாஸ்ரிக் போத்தல் விற்பனைக்கு

எம்மிடம் 1000ml, 750ml, 500ml, 325ml, 200ml, 100ml, 50ml, 28ml புதிய பிளாஸ்ரிக் போத்தல்களை மொத்தமாக வாங்குபவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

குறிப்பு - நல்லெண்ணெய்,நெல்லிக்கிரஷ், பனங்கள் உற்பத்தியாளர்களுக்கு ஏற்றபிளாஸ்ரிக் போத்தல்களும் எம்மிடம் உண்டு. (C-6524)

சிவா நறுமணப்பூங்கா
இல 288 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
(சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)
021-222 2567

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## மரண அறிவித்தல்

தோற்றம்
1945 . 03 . 23



மறைவு
2023 . 05 . 10

## இராசையா வெள்ளியம்பலம்

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா வெள்ளியம்பலம் (2023.05.10) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-இராசம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா, பசுபதி ஆகியவர்களின் அன்பு மருமகனும் சிவசோதிமணியின் அன்புக் கணவரும் மஞ்சுளா, மகிந்தன், நந்தினி, யாழினி, சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமார், டர்சினி, மனோகரன், லவணன், லக்ஷ்மன் ஆகியோரின்அன்பு மாமனும் சந்துயன், ஜசித்திரா, யோகிதா, பிரணாளினி, சதுர்ஷணன்,மாதுரி, கவிப்பிரியா, ரக்ஷிதா, சஞ்ஜிற், ஜதுஷ், பிரியங்கி, கவிவர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், சோமசுந்தரம், கார்த்திகேசு, கனகலிங்கம், தியாகராஜா, நல்லம்மா, கனகம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை (12.05.2023) காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கியாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் -
மகன்-மகிந்தன் 077 617 6642
மகள்-சிவாஜினி 077 815 5177

சங்கரத்தை
வட்டுக்கோட்டை. (C-6526)

## அன்பான அப்பாவிற்கு ஆண்டு ஒன்று

அமரர்
மரியாம்பிள்ளை தேவரட்ணம்
(தேவகிளி)
( Regina Transport, Regina Hardware, Regina Building - உரிமையாளர் )

பிறப்பு : 1951.07.16
இறப்பு : 2022.05.11



அன்போடு அறிவையும் அள்ளித்தந்து
பண்போடு பாசத்தையும் பகிர்ந்தளித்து
கலையோடு கல்வியையும் கற்றுத் தந்து
கடவுளையும் உம் வாழ்வில் காணச் செய்தீர்கள்

ஏழைகளை எளியோரை அரவணைத்து
வார்த்தையையும் வாழ்வையும் ஒன்றாக்கி
செல்வம் கண்டும் செருக்கில்லாது
எல்லா மக்களின் நண்பனானீர்கள்

கவலையும் கண்ணீரும் மனதை அடைக்க
காணவேண்டும் உங்களை என நெஞ்சம் ஏங்க
கருணையின் தேவன் ஏற்பார் என்று
காருண்ய இறைவன் பாதம் வேண்டுகின்றோம்.

எமது அப்பாவின் முதலாம் ஆண்டு நினைவாக இன்று 11.05.2023 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு பொற்பதி புனித இராயப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்குகொண்டு ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபிக்குமாறும் அதனைத் தொடர்ந்து எமது பருத்தித்துறை இல்லத்தில் நடைபெறும் மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொற்பதி, குடத்தனை,
பருத்தித்துறை.
077 460 1994 (C-6522)

அப்பாவின் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.